Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO.201/2019
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.2 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இந்திரா | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | பொன்னுரங்கம் | தொழில் | இல்லத்தரசி |
| கிராமம் | தெக்குப்பட்டு | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 20 day of December 2022.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை.- (1ம் எதிரி ஆஜர். எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை)**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். அ.சா.1 நந்தினி எனது தங்கை ஆவார். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். 1ம் எதிரிக்கும், அ.சா.1 னிற்கும் 2017 ம் ஆண்டு பொரியோர்களால் நிச்சியத்தப்படி திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது 18 சவரன் நகை மற்றும் ரூ.50000/– பணம் எதிரிகளுக்கு கொடுத்தோம். திருமணத்திற்கு பிறகு எனது தங்கை 1ம் எதிரியின் இல்லத்திலேயே தங்கி இருந்தார். அப்பொழுது 1ம் எதிரிக்கு ஆண்மை குறைபாடு காரணமாக அவருக்கும், எனது தங்கைக்கும் அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டு வந்தது. இந்த விவரத்தை எனது தங்கை என்னிடம் கூறினார். மேலும் தனக்கு ஆண்மை குறைபாடு காரணமாக உன்னுடன் தாம்பாத்திய உறவு கொள்ள இயலாது என்றும், அதனால் நீ வேறு ஒரு ஆண் நபருடன் தாம்பத்திய உறவு கொண்டு அதன் மூலம் குழந்தை பெற்று வா அதை வைத்து உன்னுடன் வாழ்க்கை நடத்துவேன் என்று 1ம் எதிரி எனது தங்கையான அ.சா.1 இடம் கூறியுள்ளார். பின்பு இது தொடர்பாக 1ம் எதிரியை அழைத்து சென்று அவருக்கு மருத்துவ பரிசோதனையை அ.சா.1 செய்துள்ளார். மருத்துவ பரிசோதனையில் 1ம் எதிரிக்கு ஆண்மை குறைபாடு உள்ள விவரத்தை உறுதி செய்துள்ளார்கள். பின்பு 1ம் எதிரியின் வீட்டில் உள்ள நபர்கள் எனது தங்கையிடம் ரூ.2 லட்சம் பணத்தினை உனது வீட்டில் இருந்து பெற்று வா என்றும், அந்த பணத்தினை வைத்து 1ம் எதிரிக்கு மருத்துவ செலவு பார்க்கலாம்

என்று கூறியுள்ளார்கள். அந்த பணத்தை கொடுத்தார்களா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது. பின்பு இது தொடர்பாக அவர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டு காவல் நிலையத்தில் அ.சா.1 புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.-**

என் வீடு தெக்குபட்டில் உள்ளது, எதிரிகளின் வீடு குடியானகுப்பத்தில் உள்ளது. எங்கள் வீட்டில் இருந்து எதிரி வீட்டிற்கு செல்ல சுமார் அரை மணி நேரம் ஆகும். எனது தங்கை புகார் கொடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது, அவர் சொல்லி தான் தெரியும். திருமண சமயத்தில் அ.சா.1 1ம் எதிரியை பிடிக்கவில்லை என்றும், அதனால் திருமணம் வேண்டாம் என்று சொன்ன விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1ம் எதிரி வீட்டிடம் சென்று சமாதானம் பேசினோமா என்றால் பேசினோம், எங்களது தாயார் வீட்டில் வைத்தும் பேசினோம். 1ம் எதிரியை பரிசோதிக்க அ.சா.1 மட்டும் தான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக என்னிடம் தெரிவித்தார். அந்த பரிசோதனை அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளரா என்றால் எனக்கு தெரியாது. என் தங்கை அ.சா.1 னிற்கு திருமண வாழ்க்கையில் ஈடுபாடு இல்லாததால் தான் பிரச்சனை ஏற்பட்டது என்றும், நான் அவருக்கு ஆதரவாக தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், உண்மையாக 1ம் எதிரிக்கு பிரச்சனை இருந்தால் அவரது பரிசோதனை அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை. Signature of Witness